தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4019, Homebush NSW 2140

www.tsch.org.au **info@tsch.org.au**

ஆண்டிறுதிப் பரீட்சை 2024

ஆண்டு: 10 திகதி: 23 - 11 - 2024

நேரம்: 02:30 மணித்தியாலங்கள்

ஆசிரியர் : திருமதி. மாலினி சோமாஸ்கந்தன்

மாணவர் பெயர்: _____

வினாக்கள்	**வினா புள்ளி**	**பெற்ற புள்ளி**
வினா 1	20	
வினா 2	15	
வினா 3	15	
வினா 4	15	
வினா 5	20	
வினா 6	15	
மொத்தப் புள்ளிகள்	**100**	

வினா இல	1	புள்ளிகள்	20	பக்கம்	2

பின்வரும் பந்தியை வாசித்து தரப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.

கல்வி கண் போன்றது என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். இதன் உட்பொருள் கல்வி இல்லாமல் நம் வாழ்க்கையில் ஒளி இல்லை என்பதே ஆகும். பார்வையற்றோரால் எதையும் பார்க்க முடியாது. கடவுள் அருளிய எழில் மிகுந்த இயற்கை ஓடையையும், வண்ண மலர்களையும், பாடும் பறவைகளையும், வானவில்லையும் பிறர் கூறச் செவிமடுக்க மட்டுமே முடியும். கண் இல்லாதவரின் வாழ்க்கை முழுமை பெற்றிருக்காது, அதுபோல கல்வி இல்லாதவனின் வாழ்க்கை பண்பட்டிருக்காது.

பணம் பொருள் ஆகிய செல்வங்கள் பிறருக்கு கொடுக்கக் கொடுக்கக் குறையும். ஆனால் கல்விச் செல்வம் மட்டுமே கொடுப்பவருக்கு நிறையும். இதனாலன்றோ, எந்த ஓர் ஆசானும் எத்தனை வருடங்கள் சென்றாலும் அறிவில் நிறைந்தவராகவே காணப்படுகிறார். அதுமட்டுமின்றி மாதா, பிதா, தெய்வம் என்ற வரிசையில் குருவிற்கும் தனியோர் இடம் இருக்கிறது. கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களை இறைவனுக்கு நிகராக மதிப்பிட்டு "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்ற பெருமையை நல்லாசிரியர்களுக்கு நம் சான்றோர் வழங்கி இருக்கிறார்கள். கல்வியைப் பாகுபாடின்றி எல்லோருக்கும் கற்பிப்பதால் ஆசிரியர்கள் போற்றத்தக்கவர்கள்.

எந்த சமூகமானாலும் சரி, அங்கு கற்றவனுக்குத் தனி மதிப்பு உண்டு. தன் ஊரார் மட்டுமன்றி வேற்றுர் மக்களும் கற்றவனைக் கௌரவிக்கிறார்கள். முடிசூடும் மன்னனும் மற்ற நாட்டில் அயலான் தான். ஆனால், கற்றவனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. அவனைத் தேடி வாய்ப்புகளும் வசதிகளும் ஓடோடி வரும். இவையனைத்தும் கற்றவனுக்கு மட்டுமே உரியதென்றால் அது அவன் பெற்ற கல்வியினாலேயே ஆகும்.

முழுமையான கல்வி கற்றல் என்பது படிப்போடு நற்பண்புகளையும் உள்வாங்குதல் ஆகும். எவனொருவன் படித்தது போல் நடக்கவில்லையோ அவனுக்கு கல்வி கற்றதன் பயன் கிடைக்காமல் போய்விடுகின்றது. கண்ணிருந்தும் குருடனாக, நிலையற்று, கல்லாதவனை விட மோசமாகிறான். மக்கட் பண்பு இல்லாத இவனைப் "படித்த முட்டாள்" என்று சொன்னாலும் தகும்.

கற்றவனுக்குத் தான்படித்தவன் என்னும் அகம்பாவம் இருக்கக் கூடாது. தாழ்ந்தோரின் நிலை கருதி இறங்குதலே கல்வியின் அடையாளம். "நிற்க அதற்குத் தக" என்ற திருவள்ளுவரின் குறள்படி கற்றவன் தான் கற்றதைச் செயல் வடிவில் பிரதிபலிக்க வேண்டும். உயர்வு தாழ்வு பார்க்காமல் மக்களோடு உறவாடித் தான் பெற்ற அறிவை அவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். தனக்குத் தெரியாததைப் பிறரிடம் இருந்து கற்றுக் கொள்ள எந்நேரமும் தயாராக இருக்க வேண்டும். இதுவே கல்வியின் உன்னதமாகும்.

1. கல்வியை கண் என்று கூறக் காரணங்கள் யாவை?

_____

_____

_____

_____

2. கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் எவ்வாறு போற்றப்படுகின்றனர்?

_____

_____

_____

_____

3. கற்றவன் அடையும் பயன்கள் யாவை?

_____

_____

_____

_____

4. “படித்த முட்டாள்” என்ற தொடர் மூலம் கட்டுரை ஆசிரியர் என்ன கூற வருகிறார்?

_____

_____

_____

_____

5. கற்றவனிடம் இருக்கக் கூடாத குணங்கள் யாவை?

_____

_____

_____

_____

வினா இல	2	புள்ளிகள்	15	பக்கம்	4

பின் வரும் விடயங்களைப் பற்றி 5 வசனங்களுக்கு குறையாமல் எழுதுக.

1. பாரதியார்

2. நெகிழி (பிளாஸ்டிக்)

3. தாஜ்மஹால்

4. நாட்டார் பாடல்கள்

5. சிலப்பதிகாரம்

வினா இல	3	புள்ளிகள்	15	பக்கம்	6

அழைப்பிதழ் ஒன்று எழுதுக.

வாணி நடனக் கலையைக் கடந்த 9 வருடங்களாகப் பயின்று வருகிறாள். அவள் பத்தாம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கும் மாணவி. அவளது பெற்றோர்கள் கபிலன், செல்வி தம்பதிகள் தமது மகளுக்கு நடன அரங்கேற்றம் செய்து பார்க்க ஆசைப்பட்டார்கள். அதற்கான விசேட பயிற்சியை நடன ஆசிரியர் செல்வராணி ரங்கன் அளித்துக் கொண்டிருக்கிறார். எதிர்வரும் 2024 டிசம்பர் மாதம் 14ஆம் தேதி சிட்னி நகர மண்டபத்தில் பிற்பகல் ஆறு மணிக்கு நிகழ்ச்சியை நடத்தத் தீர்மானித்துள்ளார்கள். இத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அழைப்பிதழ் ஒன்று எழுதுக.

வினா இல	4	புள்ளிகள்	15	பக்கம்	8

மின்னஞ்சல் எழுதுக (15 புள்ளி)

உமது பாடசாலை (mainstream school) வேலை அனுபவ வாரம் டிசம்பர் இரண்டாம் தேதி தொடக்கம் எட்டாம் தேதி வரை என அறிவித்துள்ளது. அதன்படி நீர் உமது வீட்டிற்கு அண்மையில் உள்ள முதியோர் வைத்திய நிலையத்தில் வேலை அனுபவம் பெற விரும்பி உள்ளீர். அதற்கான விண்ணப்பக் கடிதத்தை 80 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.

(கடித அமைப்பு முறை கருத்தில் கொள்ளப்பட வேண்டும்)

வினா இல	5	புள்ளிகள்	20	பக்கம்	10

கட்டுரை எழுதுதல்

பின்வருவனவற்றுள் ஒன்றைப் பற்றி 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. திரைப்படம் பார்ப்பதால் ஏற்படும் நன்மை தீமைகளை விளக்கி கட்டுரை எழுதுக.
   (முன்னுரை, திரைப்படத்தின் நோக்கம், திரைப்படங்களால் ஏற்படும் நன்மை தீமைகள், முடிவுரை என்பவற்றை அவதானத்தில் கொள்ளவும்.)

2. ''அறிவு வளர்ச்சிக்கு தாய் மொழியே அடிப்படை"

   (முன்னுரை, தாய் மொழியின் சிறப்பு, தாய்மொழி பற்று, தாய்மொழி மூலம் கல்வி பெறுதலின் அவசியம், நமது பணி, முடிவுரை என்பனவற்றை அவதானத்தில் கொள்ளவும்.)

3. நான் பிரயாணம் செய்த கப்பல் கடலில் பாறை ஒன்றுடன் மோதி உடைந்த போது . . . . . தொடர்ந்து கட்டுரையை எழுதி முடிக்கவும்.

   (முன்னுரை, பயணத்தின் நோக்கம், கப்பல் பயணத்தில் கண்டவை, கப்பல் மோதியபோது . . . . , நான் உயிர் பிழைத்தமை, முடிவுரை என்பனவற்றை அவதானத்தில் கொள்ளவும்.)

வினா இல	6	புள்ளிகள்	15	பக்கம்	12

கேட்டுக் கிரகித்தல்

வினாக்கள்	இங்கே குறிப்புகளை எடுக்கவும்
1. நீங்கள் கேட்ட உரைப்பகுதி எதைப் பற்றி கூறுகிறது? _____ _____ _____ 2. உரைப்பகுதியில் கூறப்படும் மரங்கள் எவை ? _____ _____ _____ 3. முதலாம் வகை நட்பைப் பற்றி எவ்வாறு உரைப் பகுதியில் கூறியுள்ளார்கள்? _____ _____ _____ 4. இரண்டாம் வகை நட்பை பற்றி எவ்வாறு உரைப் பகுதியில் கூறியுள்ளார்கள்? _____ _____ _____ 5. மூன்றாம் வகை நட்பை பற்றி எவ்வாறு இவ்வுரைப் பகுதியில் கூறியுள்ளார்கள்? _____ _____ _____	